நாள் 14.08.2024

வழக்கு எண் எம் சி 15/2023

மசா 1 - ஜெனிபர் த/பெ. ஜெயசீலன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை

மனு மற்றும் எனது பிரமாண வாக்குமூலங்களில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். மனுவில் உள்ள விபரங்களை நான் தான் சொன்னேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். திருமணத்திற்கான பேச்சுவார்த்தைகள் எங்கள் தரப்பிலிருந்து தான் பேசினோம் என்றால் சரிதான். நிச்சயதார்த்த சமயத்தில் எனக்கு 5 பவுன் ஆரம் மற்றும் அரை பவுன் மோதிரம் போட்டார்கள் என்றால் அணிவித்தார்கள். நான் எதிர்மனுதாரர் வீட்டிலிருந்த போது மேற்படி நகைகளை பெற்றுக் கொண்டார்கள். எனது மனு மற்றும் சாட்சியத்தில் இந்த விபரங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்றால் சரிதான். திருமண செலவுகள் அனைத்தும் எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்டன என்றால் திருமண செலவு அவர்கள் தான் செய்தார்கள். நிச்சயதார்த்த செலவு நாங்கள் செய்தோம். திருமணத்திற்கு முன்பு மாப்பிள்ளை வீடு பார்க்கும் நிகழ்விற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான். அந்த நிகழ்வின் போது என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனது பெற்றோர் சொல்லி தான் தெரியும். திருமணத்தின்போது எனக்கு சீர்வரிசை பொருட்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். அதற்கு பதிலாக தான் ரூ.3 லட்சம் மாமனார் பெயரில் டெபாசிட் செய்தோம். எனக்கு 25 சவரன் நகையும்

எதிர்மனுதாரருக்கு 5 சவரன் நகையும் போட்டார்கள். இந்த விபரங்களை தான் நான் மனு தாக்கல் செய்யும் போதும் என் வழக்கறிஞரிடம் சொன்னேன் என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.